# வியாபார நிலையங்களில் உள்ள விளம்பரப் பலகைகளில் தமிழ் மட்டக்களப்பின் முக்கியமான சில நகரங்களை மையப்படுத்திய ஓர் ஆய்வு

குகன் கோ

திராவிட மொழிகளில் தமிழ் முதன்மையானது, தனித்துவமானது. இது காலம்தோறும் பல்வேறு வகையான மாற்றங்களுக்கு உட்பட்டு வந்திருக்கின்றது. இதற்குச் சமூக மாற்றம் முக்கியமான ஒரு காரணமாகும். குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேய ஆட்சியால் ஏற்பட்ட சமூக மாற்றம் தமிழ் மொழியில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தற்காலத் தமிழில் பிறமொழி எழுத்துக்களும் பிறமொழிச் சொற்களும் பேச்சுவழக்குச் சொற்களும் புதிய புதிய மரபுத் தொடர்களும் கலந்துள்ள அதேவேளை சொற்பொருள் மாற்றமும் சொற்றொடரமைப்பு மாற்றமும் பிழையான இலக்கணப் புணர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன.

வியாபார நிலையங்களைப் பொறுத்தவரை விளம்பரப்படுத்தல் என்பது முக்கியமானதாகும். குறிப்பாக வியாபார நிலையங்களின் முன்னால் உள்ள விளம்பரப் பலகைகளில் குறித்த வியாபார நிலையத்தின் பெயரும் இன்னோரன்ன விடயங்களும் எழுதப்படுகின்றன. இவை குறித்த பிரதேசத்தில் வாழ்கின்ற பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியிலேயே அல்லது மொழிகளிலேயே எழுதப்படுகின்றன. மட்டக்களப்பைப் பொறுத்தவரை இங்கு வாழ்கின்ற பெரும்பான்மையான மக்கள் தமிழ் மொழி பேசுபவர்கள். இதனால் வியாபார நிலையங்களில் உள்ள விளம்பரப் பலகைகளில் தமிழே கையாளப்பட வேண்டும். அவ்வாறு கையாளப்பட்டுள்ள தமிழில் மேற்குறிப்பிடப்பட்ட சில இயல்புகள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஒரு மாவட்டமாகும். இது புவியியல் ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் எழுவான்கரை, படுவான் கரை என இரு பிரதேசங்களாக அடையாளம் காணப்படுகின்றது. இவ்விரு பிரதேசங்களையும் பிரிப்பது இருபத்தைந்து மைல் நீளமுடைய வாவியாகும். இவ்வாவிக்கு கிழக்கே உள்ள பகுதி எழுவான்கரை என்றும், மேற்கே உள்ள பகுதி படுவான்கரை என்றும் கூறப்படுகின்றன. எழுவான்கரை கடல் சார்ந்த பிரதேசமாகவும், படுவான்கரை வயலும் காடும் சாரந்த பிரதேசமாகவும் காணப்படுகின்றது. அண்மைக்கால யுத்தத்தில் படுவான்கரை முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் எழுவான்கரையிலேயே நகரங்கள் உருவாகின. இவ்வகையில் ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடி, கழுவாஞ்சிக்குடி, கல்லாறு போன்ற இடங்கள் குறிப்பிடத்தக்கன. இங்குள்ள வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகளில் உள்ள தமிழை அவதானித்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாய்வின் மூலம் தற்காலத்தில் தமிழ்மொழி எவ்வகையான மாற்றங்களை அடைந்துள்ளது என்பதையும் அதற்கான காரணங்களையும் இனங்காணும் அதேவேளை தமிழ்மொழியின தனித்துவத்தையும் அறிந்துகொள்ள முடியும்.

**திறவுச் சொற்கள்:** வியாபார நிலையம், விளம்பரப் பலகை, தமிழ்மொழி

கிழக்குப் பல்கலைக்கழகம். kugan299@yahoo.com